OS.NO. **124/2017**
Date: 18.11.2024
பெயர்: உதயன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை:</u>**

நான் நிதிநிறுவனம் மற்றும் கோழிப்பண்ணை நடத்திவருகிறேன் என்றால் சரிதான். நான் நடத்தி வந்த நிதிநிறுவனத்தின் பெயர் எவரஸ்டு பைணான்ஸ். அந்த நிறுவனத்தில் பாபு மற்றும் பிரவீன் ஆகியோர் கூட்டாளிகள். இந்த வழக்கில் முதல் பிரதிவாதியான மனோகரனின் மகன்தான் பிரவீன்குமார். நிதிநிறுவனம் தொடங்கிய ஓர் ஆண்டிற்குள் நிறுவனத்தை கலைத்துவிட்டோம் நிறுவனம் முறையாக பதிவு செய்தோமா என்றால் பதிவு செய்தோம். எவரஸ்ட் நிதிநிறுவனத்திடம் கடன் பெற்றவர்தான் ரமேஷ் என்றால் சரியல்ல. கடனுக்கு பாதுகப்பாகதான் நான் ஒப்பந்தம் எழுதிவாங்கினேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கிரைய ஒப்பந்த பத்திரத்தின் விஸ்திரணம் எனக்கு ஞாபகமில்லை. ஒப்பந்தம் செய்வதற்கு முன்பு சொத்து பற்றிய எந்த அசல் ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை. நிதிநிறுவனத்திடம் கடன் பெற்றிருந்த ரமேசை கடன் பாதுகாப்பிற்காக ஒப்பந்த பத்திரம் எழுதிவாங்கினேன் என்றால் சரியல்ல. நிதி நிறுவன கணக்கின்போது கடனை செலுத்தாத ரமேசிடமிருந்து மற்றுமொரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு நிறுவன கூட்டாளியான மனோகரனிடம் ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல. மனோகரனுக்கும் நவீன்குமாருக்கும் ரமேசுக்கும் இடையே ஏற்ப்பட்ட பணப்பரிவர்தனைகள் பற்றி எனக்கு எல்லா விபரமும் தெரியும். மனோகரன் இந்த வழக்கின் முதல் பிரதிவாதி தன்னிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்தவில்லை என்று ரமேஷ் மீது குற்ற முறையீடு கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது ஆனால் நான்தான் அந்த குற்ற முறையீட்டில் பிரதான சாட்சி என்றால் சரிதான். 21.8.2014 அன்று மனோகரன் என்பவருக்கு ரமேஷ் என்பவர் ரூ.8,50,000/தை குடியாத்தம் தாலுகா அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். 7.10.2015 அன்று நவீன்குமார் மனோகரன் என்பவருக்கு ரூ.2,00,000/ம் கொடுத்தார் அது ரமேசிடம் சென்றதா என்று எனக்கு தெரியாது. 24.8.2016 அன்று நவீன்குமார் மனோகரன் என்பவருக்கு ரூ.12,00,000/- கொடுத்துள்ளார். நவீன்குமார் மனோகரனுக்கு பணம் கொடுத்ததாக சொல்லியிருந்தார் ஒப்பந்ததில் மேலெழுத்து செய்துள்ளாரா என்ற எனக்கு தெரியாது. எனக்கும் ரமேசுக்கும் இடையிலான ஒப்பந்த பத்திரம் முடிந்ததுடன் ராமேசுக்கும் மனோகரனுக்கும் இடையே பணப்பரிமாற்றம் இருந்ததா என்று எனக்கு தெரியுமா என்றால் மேலே சொன்ன பணபரிமாற்றத்தை தவிர எனக்கு எதுவும் தெரியாது. மனோகரன் குடியாத்தம் காவல்நிலையத்தில் 2017ம் ஆண்டில் ஏற்படுத்திய புகாரின் மீதான தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை பற்றியும் அதில் சொல்லியுள்ள

விபரம் பற்றி எனக்க தெரியாது. மனோகரன் வழங்கிய புகாரின் சம்பந்தமாக இதுவரை என்னை யாரும் விசாரிக்கவில்லை. வழக்கு சம்பந்தபட்ட ஒப்பந்த பத்திரத்தில் எவரஸ்ட் நிதி நிறுவனத்தின் பங்குதாரர்களான பாபு கையொப்பம் செய்தாரா என்று எனக்கு தெரியாது. வழக்கிற்குரிய ஒப்பந்தம் எவ்வளவு விஸ்திரணத்திற்கு போடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது தொகை ரூ.23,95,000/ என்பது தெரியும் எந்த ஊரை சாா்ந்த சொத்து என்றால் உத்திரமேரூர் பக்கத்தில் உள்ள கிராமத்தை சர்ந்த சொத்தாகும். நான் அந்த வழக்கிற்குரிய ஒப்பந்த பத்திரத்தை படிக்கவில்லை சாட்சிக்காக என்னை அழைத்திருந்தாா்கள் சாட்சியில் கையொப்பம் செய்தேன். மேற்கண்ட ஒப்பந்த பத்திரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் எனது நிதிநிறுவனத்தின் கூட்டாளியான மனோகரனுக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எவரஸ்டு நிதிநிறுவனத்தின் கூட்டாளியான பிரவீன்குமாருக்கு 38 வயது இருக்கும். நிதிநிறுவனத்திற்கான ஆவணங்களான பதிவு சான்று மற்றும் தொழில் துவக்க சான்று ஆகிவை யாரிடம் உள்ளது என்றால் பாபுவிடம் இருக்கலாம் பாபுதான் மேலாளராக இருந்தாா். மேற்படி நிறுவனத்தில் நவீன்குமாா்தான் கூட்டாளி என்றால் சரிதான். நவீன்குமாருக்கு ஆதரவாக தவறான சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)